# காலிங்கராயனுக்கு ஈரோட்டில் சிலை

**சென்னை, செப். 20-**

ஈரோடு மாவட்டத்தின், அணிகலனாகத் திகழ்வது, காலிங்கராயன் கால்வாய். இதை கட்டிய பெருமை, லிங்கையன் என்கிற காலிங்கராயனை சேரும்.

காலிங்கராயன் கால்வாய், காவிரி ஆற்றின் கிளை நதிகளான, பவானியையும், நொய்யலையும் இணைக்கிறது. பவானி ஆற்றில் இருந்து, தண்ணீர் பிரித்தெடுக்கப்பட்டு, காவிரி ஆற்றின் ஓரமாக, அதன் தென்கரையில், 56 மைல் கிழக்காக ஓடி, ஆவுடையார் பாறை என்ற இடத்தில், நொய்யல் ஆற்றில் கலக்கிறது.

'வலுவான அணையையும், கால்வாயையும் கட்டிய காலிங்கராயனுக்கு, சிலை அமைக்க வேண்டும்' என, அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர். அவர்களின் கோரிக்கையை ஏற்று, முதல்வர் நடவடிக்கை எடுத்துள்ளார்.